**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 196/2013**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராணி |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | வடிவேல் |
| ஊர் | : | பில்லக்கொட்டாய் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 65 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.04.2025.**

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பில்லக்கொட்டாய் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.06.2012 ஆம் தேதி காவேரிப்பட்டினத்தில் உள்ள எனது தங்கை வீட்டு விசேஷத்திற்க்கு சென்றுவிட்டு மாலை சுமார் 6.00 மணியளவில் 34 ஆம் எண் டவுன் பஸ்ஸில் தொகரப்பள்ளி கூட்ரோட்டில் இறங்கி பில்லக்கொட்டாய் செல்வதற்க்காக பெருமாள் கோவில் அருகே நடந்து சென்றபோது இரண்டு நபர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். வண்டியை ஓட்டி வந்த நபர் ெஹல்மட் அணிந்திருந்தார். பின்னால் உட்காந்திருந்த நபர் முகத்தை கர்ச்சிப்பால் மூடியிருந்தார். அவருடைய கண் மட்டும் தான் தெரிந்தது. எனக்கு எதிராக மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். பின்னால் உட்காந்திருந்த நபர் இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி ஓடி வந்து எனது கழுத்தில் இருந்த 5 1/2 பவுன் கோதுமை செயினை பறித்து சென்றுவிட்டார்.

2. எனக்கு வலது பக்க கழுத்து பகுதியில் லேசான காயம் ஏற்ப்பட்டது. மேற்படி நபர் செயினை பறிக்க வந்தபோது நான் செயினை பிடித்தபோதும் அவர் செயினை பறித்து சென்றுவிட்டார். நான் சத்தம்போட்டேன். செயினை பறித்த நபர் ஓடி சென்று

இருசக்கர வாகனத்தின் பின்னால் ஏறி கொண்டு 2 நபர்களும் அங்கிருந்து வண்டியை கிருஷ்ணகிரி நோக்கி சென்றுவிட்டார்கள். அன்றைய தினம் இரவு நேரம் ஆகிவிட்டதால் மறுநாள் எனது கணவருடன் சென்று இதுகுறித்து மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 4 மாதங்கள் கழித்து மத்தூர் காவல் நிலையத்தில் இருந்து காணாமல் போன எனது செயின் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று செயினை அடையாளம் காட்டினேன்.

3. பின்னர் நீதிமன்றம் மூலம் எனது செயினை பெற்றுக்கொண்டேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் முகப்புடன் கூடிய செயின் தான் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டு திரும்ப கிடைத்ததாகும். **அந்த செயினின் புகைப்படம், சீ.டீ யுடன் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் 2–ம் எதிரி இருசக்கர வாகனத்தில் பின்னால் இருந்து இறங்கி வந்து என்னிடம் செயினை பறித்த நபர். ஆஜர் 1–ம் எதிரி தான் சம்பவத்தின் போது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 196/2013**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வடிவேல் |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | படவட்டா கவுண்டர் |
| ஊர் | : | பில்லக்கொட்டாய் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 75 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.04.2025.**

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பில்லக்கொட்டாய் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா. 1 எனது மனைவி. கடந்த 20.06.2012 ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் எனது மனைவி அ.சா.1 தொகரப்பள்ளி கூட்ரோட்டில் இருந்து எங்கள் வீட்டிற்க்கு வருவதற்க்காக பில்லக்கொட்டாய் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது கோவில் அருகே வந்தபோது 2 நபர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து எனது மனைவியின் கழுத்தில் இருந்த செயினை பறித்து சென்றதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். நாங்கள் மறுநாள் மத்தூர் காவல் நிலையம் சென்று எனது மனைவி புகார் அளித்தார். சுமார் 6 மாதங்கள் கழித்து காணாமால் போன நகை கிடைத்ததாக மத்தூர் போலீசார் தகவல் சொன்னார்கள். காவல் நிலையம் சென்று எனது மனைவி நகையை அடையாளம் காட்டினார். பின்னர்

நீதிமன்றம் மூலம் நகையை வாங்கி கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 196/2013**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவி |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | கிருஷ்ணன் |
| ஊர் | : | பில்லக்கொட்டாய் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 50 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.04.2025.**

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பில்லக்கொட்டாய் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தி. அ.சா.2 எனது சித்தப்பா. கடந்த 20.06.2012 ஆம் தேதி நான் தொகரப்பள்ளி கூட்ரோடு சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்க்கு வருவதற்க்காக எனது இருசக்கர வாகனத்தில் பழைய பிரிட்ஜ் அருகே வந்தபோது அ.சா.1 கீழே விழுந்து கிடந்தார். அவரை விசாரித்தபோது 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து தனது கழுத்தில் இருந்த செயினை பறித்து கீழே தள்ளிவிட்டதாக தகவல் சொன்னார். அவரை அவரது வீட்டிற்க்கு அழைத்து சென்றுவிட்டு வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். சுமார் 4 மாதங்கள் கழித்து காணாமல் போன நகை கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.